[1990 ஏப்ரல் 16

சித்த மருத்துவமனைகள்

*5056 திரு. சு. குருநாதன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவத்திற்கு தனி மருத்துவமனைகள் மாவட்ட வாரியாகவும், வட்ட வாரியாகவும் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், சித்த மருத்துவ முன்னேற்றத் திற்கு ஏதேனும் புதிய திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சித்த மருத்துவத்திற்குத் தனி மருத்துவ மனைகள் மாவட்ட வாரியாகவும், வட்ட வாரியாக வும் செயல்படுத்தும் திட்டம் உள்ளது.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 வருடங்களாக சித்த மருத்துவம் பயின்ற சித்த மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வில்லை. இதைக் கருத்தில் கொண்டு சித்த மருத்துவத்தின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 12 மாவட்டத் தலைமையிடங்களில் சித்த மருத்துவமனை செயல் படுகிறது. 2 வட்டங்களிலும் இந்த மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும் இது குறித்து அரசினுடைய நிதி நிலைமை யைக் கருத்தில்கொண்டு விரிவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்று இருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]